மிகுதியான விளைச்சல் தரும் நெல் ரகங்கள் உட்பட, குறுகிய காலக் கோடைப் பயிராகிய சொர்ணவாரிக்கென, 1967 ஏப்ரல் முதல் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 5,608 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டது. 1–4–1967 முதல் தொகுப்பு விலைகள் (Pool prices) உயர்த்தப்பட்டதன் காரணமாக, சிறிது காலத் திற்கு உர வாணிபம் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த இடையீட்டினைத் தவிர உழவர்களுக்கு உரங்கள் எளிதாகவும், ஒரு சீராகவும் தொடர்ந்தும் கிடைத்து வந்துள்ளன.

அரக்கோணம் வட்டத்தைப் பொறுத்தவரையில், உரங்களை விற்கும் வேலையும் பங்கீடு வேலையும் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அச் சங்கம் தனது சில்லறை வியாபாரிகள் மூலம் உரங்களைப் பங்கிடும். 1966–67-ல் அரக்கோணம் வட்டத்திற்கு 2,823 மெட்ரிக் டன் உரம் தேவை என மதிப்பிட்டிருந்தது. ஆனால், 2,046 மெட்ரிக் டன் உரமே (அமோனியம் சல்பேட் கணக்கில்) இந்த வட்டத்திற்கு வழங்கப்பட்டது. அம்மாவட்டத்தில் நிலவும் பொது நிலைமையைக் கருதிப் பார்க்கையில், இது போதுமானதல்லவெனச் சொல்ல முடியாது. மிகுதியான விளைச்சல் தரும் பயிர்வகை உட்பட சொர்ணவாரி கோடைப் பயிருக்காக, 1967 ஏப்ரல் முதல் இந்நாள் வரையில் அரக்கோணம் வட்டத்திற்கு மட்டும் 551 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டுள்ளது.

1967 ஜூன் இரண்டாவது வாரத்தில் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திற்குக் கடைசியாக ஒதுக்கப்பட்ட 115 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) இன்னும் எடுத்து அனுப்பப்படவில்லை. ஒதுக்கப்பட்டுள்ள உரங்களை மொத்த விற்பனைச் சங்கம் எடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது. அச்சங்கத்தின் நிதி வரையறை, ஏனைய வரையறைகள் காரணமாக அத்தாமதம் ஏற்படுவ தாகக் கூறப்படுகிறது. உரங்களைப் பங்கிடுவது குறித்து மாவட்ட அளவில் உரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு அதிகாரிகளும் அரசுச் சார்பற்றவர்களும் உறுப்பினர்களாய் உள்ளனர். இந்த வட்டத் தில் உரங்களை இன்னும் சிறந்த முறையில் பங்கிடுவதற்கான சில பரிவுரைகளை இக்குழு வழங்கியுள்ளது. இந்தப் பரிவுரைகளை வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் தனியே ஆய்வு செய்துவருகிறார். எனவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் சொர்ணவாரிப் பயிருக்கு இரசாயன உரங்கள் ஒரு சீராகப் பங்கிடப்பட்டன என்பதையும் சொர்ணவாரிப் பயிருக்காக உரங்களைப் பெறு வதில் எந்தத் தனி இடர்பாடுகளும் உழவர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் இதனால் அறியலாம்.

(ஊ) கோவையில் தொழிலாளருக்குப் போதிய மருத்தவ வசதியின்மை.

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவையில் உள்ள அரசினர் தலைமை மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு என ஒரு பிளாக் மட்டுமே இருப்பதால் கோவை மாவட்டம் முழுவதும் உள்ள ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி மருத்துவம் பார்க்கும் வசதி இல்லாமை குறித்த அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிக சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கிறேன். கோவையில் அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ வசதிக்கான இணைப்புக் கட்டிடத்தில் கோயம்புத்தூர் பகுதியி லுள்ள காப்புறுதித் திட்டத் தொழிலாளர்கள் தங்கியிருந்து மருத்துவம் பெறுவதற்கான வசதிகள் போதுமான அளவில் இல்லை. இது பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிலை குறித்து அரசின் நாட்டத்தை ஈர்த்து தமிழகச் சட்டமன்றப் பேரவையின் விதிகளைச் சேர்ந்த 41-வது விதியின் கீழ் திரு. எஸ். துரைசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

1967 ஜூலை 18] [திரு. செ. மாதவன்]

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் கோயம்புத்தூர் பகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கும் பயன்படும் வகையில் 1955-ம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது. 1–6–1967 தேதி வரை, கோயம்புத்தூர் பகுதியிலுள்ள தொழிலாளர்களில் 72,598 பேர்கள் மட்டுமே காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ள மேற்படி தொழிலாளர்களுக்கு அரசின் மருத்துவ நிலையப் பணி மூலமாகவும், அரசின் நியமன மருத்துவப்பணி மூலமாகவும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இருவகை ஏற்பாடுகளின் மூலமாகவும் அவர்கள் வெளி நோயாளிகளாகச் சிகிச்சை பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அரசின் மருத்துவ நிலையப் பணித் திட்டத்தின் கீழ் தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருந்தகங்கள் ஐந்தும், இயங்கும் மருந்தகங்கள் இரண்டும் உள்ளன. இந்த மருந்தகங்களில் பதிவு செய்துகொண்டுள்ளவர்களுக்கு இவைகளின் மூலமாக தேவையான மருத்துவ உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் நியமன மருத்துவப் பணித்திட்டத்தின் கீழ் 55 நியமன சிகிச்சை நிலையங்களும், ஒரு பயனுதவி மருந்தகமும் உள்ளன. இந்த நியமன சிகிச்சை நிலையங்களிலும் பயனுதவி மருந்தகத்திலும் பதிவு செய்துகொண்டுள்ள தொழிலாளர்களுக்கு இவைகள் வேண்டிய மருத்துவ உதவியைச் செய்து வருகின்றன.

கோயம்புத்தூர் பகுதியில் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்குத் தங்கியிருந்து மருத்துவம் பெறும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கோவை, அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் 84 படுக்கை வசதியுடைய இணைப்புக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. (அவை பொது நோயாளிகளுக்காக 45 படுக்கைகளும் பேறு மகளிர்க்காக 14 படுக்கைகளும் கொண்ட ஒரு பொதுக்கட்டிடமும், காச நோயாளிகளுக்கு 25 படுக்கைகள் கொண்ட மற்றொரு கட்டிடமும் ஆகும்). மேலும் பெருந்துறையிலுள்ள இராமலிங்கம் காசநோய் மருத்துவ நிலையத்தில் காச நோயாளிகளுக்காக 55 படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் பகுதியிலிருந்து வருகிற காப்புறுதித் திட்ட காச நோயாளிகளுக்கு இங்கே சிகிச்சையளிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர, கோயம்புத்தூரில் உள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையிலோ, இராமலிங்கம் காச நோய் மருத்துவ நிலையத்திலோ சேர்க்கப்பட வேண்டுமென்று அனுப்பப்படுகிற நோயாளிகளும்—காப்புறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கென படுக்கை ஏற்பாடு செய்துள்ளதற்குக் கூடுதலாகவே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதற்காகும் செலவு அரசினால் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் கொடுக்கப்படுகிறது.

மேலும், கோயம்புத்தூர் பகுதியிலுள்ள காப்புறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அவசியமான மருத்துவ வசதிகளை அளிப்பது அவசியம். இந்நோக்குடன் கோயம்புத்தூரைச் சேர்ந்த உப்பிலிப்பாளையத்தில், அனைத்து நோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் பிரிவுகளுடன் (பிள்ளைப்பேறு—காசநோய் ஆகியவற்றுக்கும் ஏனைய நோய்களுக்கும் பொதுவாக) 500 படுக்கைகளை கொண்ட தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவமனை ஒன்று தனியே கட்டப்பட்டு வருகிறது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கட்டிட வேலை விரைவில் முடிவெய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு பணியாற்றத் தொடங்கிவிட்டால் கோயம்புத்தூர் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு, தங்கியிருந்து சிகிச்சை பெற போதிய வசதியில்லை என்கிற குறைபாட்டிற்கே இடமிராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. முனு ஆதி அவர்கள் 41-வது விதியின் கீழ் அவசரமும் முக்கியமுமான காரியம் ஒன்றை கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர் இடத்தில் இல்லாததால் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதுகிறேன்.